T3-நிலக்கரியும் பெட்ரோலியமும்

மாதிரி வினாத்தாள் VIII

8th Standard

**அறிவியல்**

Reg.No. :

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 01:30:00 Hrs

Total Marks : 35

### பகுதி - அ

5 x 1 = 5

1) அதிக ஆற்றலைக் கொண்டுள்ள நிலக்கரி எது?
   (a) லிக்னைட் (b) பீட் (c) பிட்டுமினஸ் (d) ஆந்தரசை

2) வீட்டில் எரிபொருளாகப் பயன்படும் நிலக்கரி எது?
   (a) ஆந்தரசை (b) பிட்டுமினஸ் (c) பீட் (d) லிக்னைட்

3) எதிலிருந்து நாப்தலின் உருண்டை பெறப்படுகிறது?
   (a) நிலக்கரி வாயு (b) கல்கரி (c) அம்மோனியா கரைசல் (d) நிலக்கரி தார்

4) ஜெட் விமானங்களில் எரிபொருளாகப் பயன்படுவது எது?
   (a) பெட்ரோலிய வாயு (b) பெட்ரோல் (c) மண்ணெண்ணெய் (d) டீசல்

5) கீழ்க்காண்பனவற்றுள் புதைப்படிவ எரிபொருள் எது?
   (a) விறகு (b) காகிதம் (c) பெட்ரோலியம் (d) பாஸ்பரஸ்

### பகுதி - ஆ

5 x 1 = 5

6) LPG இன் விரிவு______

7) CNG இன் விரிவு_______

8) இயற்கை வாயுவில் அதிகமாக உள்ள வாயு________

9) ஆற்றல்களின் முதன்மை மூலம்________

10) கொதி நிலைகளில் வேறுபடும் திரவங்களை அவற்றின் கலவையிலிருந்து _____முறை மூலம் பிரித்தெடுக்கப்படுகிறது

### பகுதி - இ

5 x 2 = 10

11) ராமின் குடும்பத்தினர் LPG வாயுவைப் பயன்படுத்தி விரைவாக உணவைச்ச மைக்கின்றனர். ஆனால் முருகன் குடும்பத்தினர் உணவு சமைக்க அதிக நேரம்எ டுத்துக்கொள்கின்றனர். என்ன காரணமாக இருக்கலாம்?

12) கார்பனாக்கல் என்பதைப் பற்றி நீங்கள் அறிவதென்ன?

13) நிலக்கரி மற்றும் கல்கரி - வேற்றுமைப்படுத்துக

14) பெட்ரோலியத்திலுள்ள மூன்று துணைப்பொருள்கள் A ,B மற்றும் C ஆகியவற்றின்கொ தி நிலைகள் முறையே 120ட ,70டமற்றும் 250டிஊ இம்மூன்றின்க லவையை பின்னக் காய்ச்சி வடித்தலுக்கு உட்படுத்தினால், கலனின்அ டிப்பகுதியில்கி டைப்பது எது

15) கீழே நிலக்கரியின் வகைகளும் அதில் உள்ள கார்பன் அளவும்உங்களுக்குத்த ரப்பட்டுள்ளன. இதன் மூலம் எந்த நிலக்கரியை நாம்ப யன்படுத்தினால்அதிகமான வெப்ப ஆற்றலைப் பெற முடியும்?
   லிக்னைட் - 25% முதல் 35% கார்பன்
   பிட்டுமினஸ் - 45% முதல் 86% கார்பன்
   ஆந்த்ரசைட் - 87% முதல் 97% கார்பன்

### பகுதி - ஈ

5 x 3 = 15

16) சமீப காலமாக வளைகுடா நாடுகளாகிய துபாய், சௌதிஅரேபியா, அபுதாபி ஆகிய நாடுகள் பணக்கார நாடுகளாகக் கருதப்படுவதேன்?

17) கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் போன்ற செய்தியினை நீங்கள்ப டித்திருப்பீர்கள். இத்துன்பத்திற்கான காரணம்எ ன்ன? முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக



பெரம்பூரில்

பாதாள சாக்கடையில் மூழ்கி என்ஜினியர் உள்பட 2 பேர் பலி

ராயபுரம், செப.27

பெரம்பூரில் பாதாள சாக்கடையில் வேலை செய்த போது விஷ வாயு தாக்கி, மூச்சு திணறி தொழிலாளி பலியானார். அவரை காப்பாற்ற சென்ற என்ஜினீயரும் சாக்கடைக்குள் விழுந்து மூழ்கி பரிதாபமாக உயிர்

18) நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்பவர்கள் மின்கல விளக்கைப்ப யன்படுத்துகின்றனர். ஆனால் தீப்பந்தத்தினையைப் பயன்படுத்துவது இல்லை. ஏன்?

19) LPG ஐ வாயுத் தீமூட்டியினால் (Gas Lighter) பற்றவைக்கலாம் ஆனால்வி றகை அவ்வாறு பற்றவைக்க முடியாது. ஏன்?

20) பெட்ரோலியத்தின் துணைப் பொருள்களைச் சேகரித்து அதனை வகுப்பறையில்பார்வைக்கு வைக்கச் செய்தல். (ஐந்து)

*****************************************

https://www.qb365.in